Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 4.50

ஏடு: 6 பிரசோற்பத்தி ஆண்டு வைகாசி மீ 14 உ செவ்வாய்க்கிழமை [28—05—1991] UTHAYAN — A Lively National Tamil Daily இதழ்: 175

## ஸ்ரீலங்கா மீது மர்ம விமானங்கள் அடிக்கடி ஊடுருவல்; தடுக்க சுப்பர் சோனிக் ஜெட் சண்டை விமான அணி!

கொழும்பு, மே 28

அடையாளம் தெரியாத பல விமானங்கள் ஸ்ரீலங்காவின் வான் பிராந்தியத்தினூடாக அடிக்கடி ஊடுருவிச் செல்கின்றன. அவற்றைக் கண்டுபிடித்து, ஊடுருவலைக் கட்டுப்படுத்துவதற்காக சுப்பர்சோனிக் ஜெட் சண்டை விமான அணி ஒன்றை ஸ்ரீலங்கா விமானப்படை அமைக்க இருக்கிறது.

ஸ்ரீலங்கா தனது வான் பிராந்தியத்தைப் பாதுகாத்துக்கொள்ள சுப்பர்சோனிக் ஜெட் சண்டை விமானங்களை விரைவில் கொள்வனவு செய்யவிருப்பதாக விமானப்படைத் தளபதி எயர்மார்ஷல் டெரன்ஸ் குணவர்த்தனா சொன்னார்.

விமானப் படையை ஜெட் மயப்படுத்தும் திட்டம் பாதுகாப்பு நோக்கங்களுக்காக செயல்படுத்தப்பட உள்ளது. தாக்குதல் நோக்கங்களுக்காக அல்ல என்றும் அவர் கொழும்பு ஆங்கில வார இதழ் ஒன்றுக்கு அளித்த பேட்டி ஒன்றில் தெரிவித்தார்.

அடையாளம் தெரியாத விமானங்கள் இலங்கை வான் பிராந்தியத்தை அடிக்கடி பயன்படுத்தி வருகின்றன. அவற்றைத் தற்சமயம் கண்டு பிடிக்க முடியாமல் உள்ளது.

சுப்பர்சோனிக் ஜெட் சண்டை விமானங்கள் கிடைத்ததும் அடையாளம் தெரியாத விமானங்களின் ஊடுருவலைக் கட்டுப்படுத்தக் கூடியதாக இருக்கும் என்றும் எயர்மார்ஷல் டெரன்ஸ் குணவர்த்தனா சொன்னார்.

### இலங்கை இனப் பிரச்சினை:

# மத்தியஸ்தம் செய்வதற்கு பிரிட்டிஷ் அரசு தயாராம்

## நாடாளுமன்றத்தில் அறிவிப்பு

லண்டன், மே 28

இலங்கையின் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணும் பொருட்டு பிரிட்டிஷ் அரசு மத்தியஸ்தம் வழங்கி உதவுவதற்கு எந்நேரமும் தயாராக இருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

பிரிட்டிஷ் வெளியுறவு மற்றும் பொதுநலவாய நாடுகள் அலுவலகம் பிரிவு ஆகியவற்றுக்குப் பொறுப்பான துணையமைச்சர் திரு. மார்க் லெனொக்ஸ் பொயிட் இத்தகவலை பிரிட்டிஷ் நாடாளுமன்றத்தில் வெளியிட்டுள்ளார்.

அவர் மேலும் கூறியதாவது:-

இலங்கை இனப்பிரச்சினைக்குப் பேச்சுவார்த்தை மூலம் தீர்வு காணும் விடயத்தில் பிரிட்டிஷ் அரசு அக்கறை காட்டி வருகிறது.

பேச்சுவார்த்தைக்கு உதவுவதற்கு எமது அரசு எப்பொழுதும் தயார். இலங்கை அரசு அழைத்தால் மத்தியஸ்தத்துக்கு எம்மாலான பங்களிப்பை வழங்குவோம்.

அதேசமயம் பொதுநலவாய நாடுகள் [கொமன்வெல்த்] அமைப்பு மூலம் தீர்வு காண ஆஸ்திரேலியா போன்ற நாடுகள் எடுத்துவரும் முயற்சிகளுக்கும் நாம் ஒத்துழைப்பு வழங்கத் தயாராகவுள்ளோம்—என்றார்.

பிரிட்டிஷ் நாடாளுமன்றத்தில் தொழிற்கட்சி எம்.பி. திரு ஜோன் பாட்டிக்கேட்ட கேள்வி ஒன்றுக்கு பதில் அளிக்கையிலேயே துணை அமைச்சர் மேற்கண்ட விடயங்களை தெரிவித்தார். [ஒ-எ]

## பலாலியிலும் ஷெல், வேட்டு!

யாழ்ப்பாணம், மே 28

பலாலி இராணுவ முகாமிலிருந்து நேற்று முன்தினம் இரவுதொடக்கம் நேற்றுக் காலை வரை சுற்றுப்புற குடியிருப்புக்களை நோக்கி தொடர்ச்சியான ஷெல் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டன.

நேற்று அதிகாலை வேளையில் தொடர்ச்சியான துப்பாக்கி வேட்டுக்களும் தீர்க்கப்பட்டன.

தெல்லிப்பளை, கட்டுவன், வளலாய் பகுதிகளில் ஷெல்கள் விழுந்து வெடித்தன. [ஓ-15]

## பழுகாமத்தில் 3 தமிழர் படுகொலை

யாழ்ப்பாணம், மே 28

மட்டக்களப்பு மாவட்டம், பழுகாமம் பகுதியைச் சுற்றிவளைத்த இராணுவத்தினரும் ஜெரோவினரும் அப்பகுதியில் 3 அப்பாவித் தமிழர்களைக் கொலை செய்துள்ளனர். மேலும் மூன்று பேர்வரைகைது

[2 ஆம் பக்கம் பார்க்க]

### முச்சந்தி முரளி



அப்ப ஸ்ரீலங்காவின்ரை பாதுகாப்பு ஏற்பாடுகள் "சுப்பர்" ஆக இருக்கும் போலை......!

## கொழும்பில் கள்ள நோட்டு

கொழும்பு, மே 28

கொழும்பு, கொட்டாஞ்சேனையில் பொலிஸார் 7ஆயிரம் ரூபா [கள்ள நோட்டுக்களைக் கைப்பற்றினர். அது தொடர்பாக மூன்று பேர் கைதாகினர். [ஒ-எ]

## ராஜீவைக் கொன்ற குண்டு அதி சக்தி வாய்ந்த RDX

புதுடில்லி, மே 28

முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி கொலையுண்ட குண்டு வெடிப்புச் சம்பவம் தொடர்பாக, இது வரை நடைபெற்ற சோதனைகள், விசாரணைகள் அது எப்படி நடந்திருக்கும், குண்டு எத்தன்மையது என்பதற்கான சில தடயங்களைத் தந்திருப்பதாக பி.ரி.ஐ. ஸ்தாபனம் வெளியிட்ட செய்தி ஒன்றில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

குண்டை வெடிக்க வைத்த தனிநபர் தற்கொலைப் படைப் பெண்ணுக்கு வயது 25 முதல் 30 இருக்கலாம். கறுப்பு நிறமானவர் சுமாரான உயரம், மூக்குக் கண்ணாடி அணிந்திருந்தார்.

பாதுகாப்பு அதிகாரிகள் சோதனை நடத்தி ஆபத்தில்லை என்று சரி சொல்லிவிட்ட பகுதிக்குள் அதன் பின்னர் திடீரெனப் புகுந்து இடம் பிடித்துக் கொண்டார் இந்தப் பெண். சந்தனக்காய் மாலை ஒன்றை ராஜீவுக்குச் சூட்டுவதற்காகக் காத்து நிற்பவர்போல அங்கே தோன்றினார்.

சுமார் ஐம்பது வயதான பெண்மணிக்கும், யுவதியான காங்கிரஸ் தொண்டர் ஒருவருக்கும் இடையில் இடம் பிடித்துக் கொண்டார்.

### டெனிம் துணி

அவர் ஜீன்ஸாலும் "டெனிம் ஜக்கெட்" எனப்படும் மேற்

[2 ஆம் பக்கம் பார்க்க]

## சின்னமடு இராணுவச் சிப்பாய்கள் தாக்குதல் நிறுத்தத்தை மீறினர்!

### சரமாரியான வேட்டு, ஷெல் வீச்சு நடத்தினர்

ஊர்காவற்றுறை, சின்னமடுப் பகுதியில் நிலைகொண்டுள்ள இராணுவத்தினர், தாக்குதல் நிறுத்தத்தை மீறி குடியிருப்புப் பகுதிகளை நோக்கி சரமாரியான வேட்டுக்களைத் தீர்த்தனர்.

நேற்று முற்பகல் 11 மணியளவில் படையினர் நடத்திய இந்தத் திடீர் தாக்குதலினால், அப்பகுதிகளுக்குச் சென்ற மக்கள் பெரும் பதற்றமும் பீதியும் அடைந்து, அங்கிருந்து திரும்பினர்.

அதேசமயம் மயிலப்புலம், சரவணைப் பகுதிகளை நோக்கிப் படையினர் ஷெல் தாக்குதல்களையும் [illegible]னர்.

பிற்பகல் 4 மணியளவில் [illegible]னர் சி-பிளேன் ஒன்றும் தீவுப் பகுதியை வட்டமிட்டு நோட்டமிட்டது.

வெசாக்கை முன்னிட்டு நேற்று [திங்கள்] அதிகாலை முதல் புதன் நள்ளிரவு 12 மணி வரை தாக்குதல் நிறுத்தம் [illegible] அறிவித்திருந்தது தெரிந்ததே. [ஓ-15]

## இரகசியமான இடத்தில் பெண்ணின் சடலம் அடக்கம்

ஸ்ரீ பெரும்புதூர் குண்டு வெடிப்புச் சம்பவத்துக்கு காரணமானவர் என்று சந்தேகிக்கப்படும் அடையாளம் காணப்படாத பெண்ணின் சடலம் 'எம்பாம்' செய்யப்பட்டு இரகசியமான ஓரிடத்தில் புதைக்கப்படும் என்று சென்னை செய்திகள் தெரிவித்தன.

அச்சடலம் தகனம் செய்யப்பட மாட்டாது என்றும் அது கடுமையான பாதுகாப்பின் கீழ் வைக்கப்படும் என்றும் அச் செய்திகள் தெரிவித்தன. [ட-எ]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

ஒரு சோடி வான்கோழி விற்பனைக்கு உண்டு. N N, மரியாம்பிள்ளை 27, கொன்வென்றோட் லேன், யாழ்ப்பாணம். [16922]

### ரைப்ரைட்டர் விற்பனைக்கு

தமிழ். [புதிய, பழைய விசைப்பலகை] ஆங்கிலம், Standards - Portables தட்டச்சு இயந்திரங்கள் விற்பனைக்கு உண்டு பியூட்டோ, 39/17, மின்சார நிலைய வீதி 3 ஆம் ஒழுங்கை யாழ்ப்பாணம். [பஸ் நிலையம் முன்பாக, ஷப்றா அருகாமையில்]. [சி/0023]

### நீமியா உரம்

பூச்சிகளால், நோயினால் பாதிப்புறும் நெற்பயிரைக் காப்பாற்ற "நீமியா" உரத்தை நீரில் ஊறவைத்து வடிகட்டித் தெளியுங்கள். கைமேறபவன். மிசுக்வைம். C[/0057]

### மணமகன் தேவை

யாழ். இந்து செவ்வாய்க் குற்றமற்ற கிழக்கும், விவேகமுமுள்ள சைவ போசன அரசாங்க உத்தியோகத்தருக்கு 37—45 வயதுக்கிடைப்பட்ட மணமகன் தேவை. சைவ போசனம் அல்லாதோரும் தொடர்பு கொள்ளலாம். மங்கள ஏஜென்சி, கொய்யாத் தோட்டம், யாழ்ப்பாணம். [16923]

### தவறிவிட்டது

முத்திரைச் சந்தியில் இருந்து கோரநீவுக்கு பிரயாணம் செய்யும் போது கீழ்க்கண்ட நபர் உடைய அடையாள அட்டைகள் இரண்டு தவறிவிட்டது கண்டெடுத்தவர்கள் இராஜேந்திரா ஸ்ரோர்ஸ் 108, K K S, றோட், யாழ்ப்பாணம் கடையில் கொடுத்தால் சன்மானம் வழங்கப்படும். 212350079 V. 345550143 V [16925]

### சன்லைற் றைக்கிளீனர்ஸ்

தரமான. தெளிவான போட்டோஸ்ரட் பிரதிகளை உடனுக்குடன் பெற்றுக்கொள்ள நாடுங்கள் சன்லைற் றைக்கிளீனர்ஸ் பெரிய கடை, யாழ்ப்பாணம் [சி-0020]

### A/L தனிப்பட்ட

பிரத்தியேக வகுப்புகள்

A/L பௌதிகவியல், தூய கணிதம், பிரயோக கணிதம் பல ஆண்டுகளாக மேற்படி பாடங்களை கற்பித்து வரும் இலங்கை விஞ்ஞான பட்டதாரி ஆசிரியரினால் ஏராளமான பயிற்சிகளோடு தனிப்பட்ட முறையில் விசேஷமாகக் கற்பிக்கப்படும். R பாலா B Sc [Cey] 17/1, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம். [16926]

### வகுப்புகள்

Cake Icing, Sugar Craft General Cookery புதிய பயிற்சி வகுப்புகள் விரைவில் ஆரம்பமாக உள்ளன. உடன் தொடர்பு கொள்ளவும். Yogi Home Science Academy 71, Nayanmar Road, (off Kachcheri Nallur Road) Nallur, Jaffna [சி/5090]

### ஆங்கில வகுப்புகள்

ஆங்கில ஆசிரியர் தெரிவுப் பரீட்சைக்குரிய பிரத்தியேக தனிப்பட்ட விசேஷ வகுப்புகள் இன்று 27-5-91இல் ஆரம்பமாகின்றது. தொடர்பு: 4, பிள்ளையார் ஒழுங்கை, திருநெல்வேலி. [16913]

### ஜோதிடம்

சிங்கராசி அரசுத் தலைவர்கள் ராஜீவ் காந்தியினதும், ஜெயலலிதாவினதும் ஜாதகங்களின் பெலவீனங்களாலும், வியாழசுசமின்மையாலும் நாடாளும் யோகமில்லை ராஜீவிற்கு உயிராபத்தும், ஜெயலலிதா முதல்வராகும் பதவியை இழப்பார் எனவும் எமது ஜோதிட சஞ்சிகைகளில் முன்கூட்டியே வெளியிடப்பட்டுள்ள ஜாதகங்களின் கணிப்புகள் Prof. சத்தியதாஸன், ஞானம்ஸ் சித்தன்கேணி [4101]

### மணமகள் தேவை

பொறியியல் துறையில் எம் எஸ்ஸி. பட்டம் பெற்றவரும், கனடாவில் பணிபுரிபவருமான 34 வயதுடைய இந்து மணமகனுக்கு, ஆகக் குறைந்தது ஜி சி. ஈ உயர்தரத்தில் சித்தி எய்தியவரும், குடும்பப் பாங்கானவருமான அழகிய ,28 வயதுக்கு உட்பட்ட மணமகளைப் பெற்றோர் எதிர்பார்க்கின்றனர். அண்மையில் எடுத்த புகைப்படத்துடனும், சாதகத்துடனும் தொடர்பு கொள்க. ஏற்றுக் கொள்ளப்படாதவர்களின் புகைப்படமும், சாதகமும் திருப்பி அனுப்பப்படும். இல. 320 பே/பா உதயன், நாவலர் வீதி, யாழ்ப்பாணம் [சி/0060]

## ரூ. 7½ லட்சம் அபராதம்

கொழும்பு மே 28

இந்தியாவில் இருந்து தங்கப்பாளங்களை கடத்திவர முயற்சித்தார் என்று கூறப்படும் இலங்கைப் பெண் ஒருவருக்கு சுங்கத் திணைக்களம் 7½ லட்சம் ரூபா அபராதம் விதித்தது [இ-எ]

### சவர்க்காரம்

சுழிபுரம், மே 28

காரைநகர் பனைதென்னை வளச் கூட்டுறவுச்சங்கம் வழக்கம்பரையில் இயங்கும் கிளை மூலம் 'சன்லைட்', 'லக்ஸ்' சவர்க்காரங்களை வழங்கியது. [இ-28]


## NEW SCIENCE ACADEMY

JAFFNA

PHYSICS - நந்தகுமார் B. Sc.

| | | | |
|---|---|---|---|
| ஒளியியல் | Tue Thu. | 2-45 | 4-00 |
| மின்காந்தவியல் | Tue. | 4-15 | 6-15 |
| வினா - விடை [வெப்பவியல்] | Sat. Sun | 12-30 | 2-00 |

ஆரம்பம்: 28 - 05 - 1991

(செவ்வாய்)

[சி-0059]


சர்வோதய நிவாரணம்:

## வவுனியா தமிழர்களுக்கு எதுவுமே இடைப்பதில்லை!

யாழ்ப்பாணம், மே 28

கொழும்பிலிருந்து சர்வோதயம் வவுனியாப் பகுதிக்கு அனுப்பி வைக்கும் நிவாரண உதவிகள் முழுக்க முழுக்கச் சிங்கள மக்களையே சென்றடைவதாக அறிய வந்துள்ளது.

சர்வோதயத்தின் வவுனியா அலுவலகம் முன்னர் சாலியபுரவில் அமைந்திருந்தது.

அப்போது கொழும்பிலிருந்து வவுனியா மாவட்டத்துக்கென வந்து சேரும் நிவாரணப் பொருள்கள் சிங்கள, தமிழ்ப் பிரிவுகளில் உள்ள பாதிக்கப்பட்ட மக்களுக்குப் பகிர்ந்தளிக்கப்பட்டது. சிங்களப் பகுதிகளுக்கே கூடிய பங்கு சென்றாலும் தமிழ் மக்களுக்கும் கணிசமாகக் கிடைத்தன.

ஆனால் சாலியபுரவில் சர்வோதய முகாம் இயங்கிய இடம் இராணுவ முகாமாக மாற்றப்பட்டதைத் தொடர்ந்து நிலைமை மோசமடைந்துள்ளது.

சர்வோதயத்தின் வவுனியா அலுவலகம் குடியிருப்புக்கு மாற்றப்பட்டுள்ளது. கொழும்பிலிருந்து இந்த அலுவலகத்துக்கு அனுப்பப்படும் நிவாரணப் பொருள்களை சாலியபுரவில் உள்ள இராணுவத்தினர் சிங்களப் பகுதிகளுக்குத் தாமே திருப்பிவிடுகின்றனர்.

இதனால் தமிழ்ப் பகுதிகளுக்கு, தமிழ் அகதிகளுக்கு, இடம்பெயர்ந்தோருக்கு சர்வோதய உதவி எதுவுமே கைக்கு வந்து சேருவதில்லை என்றும் தெரிவிக்கப்படுகிறது. [அ-3]

## ராஜீவைக் கொன்ற...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

சட்டையும் அணிந்திருந்தார். அந்த மேற்சட்டை 'டெனிம்' துணியினால் தைக்கப்பட்டிருக்கிறது. சட்டையின் இரண்டு மடிப்பு 'டெனிம்' துணியில் இருந்த போதிலும் மூன்றாவது உள்ளடுக்கு வேறு துணியினால் தைக்கப்பட்டிருக்கிறது.

புலனாய்வு செய்வோருக்கு மேற்சட்டையின் பின்பக்கம் கிடைக்கவில்லை. கிழிந்து, நசிந்து போன முன்பக்கத் துண்டே கிடைத்திருக்கிறது.

### முதுகில் வெடிகுண்டு

அந்த யுவதி வெடிகுண்டை முதுகில் கட்டி இருந்திருக்கிறார்.

அவர் பயன்படுத்திய குண்டு RDX ரகத்தைச் சேர்ந்தது. C-1, C-2, C 3 சேர்வை கொண்டது. அதன் நிறை அரைக் கிலோவுக்கும் சற்று அதிகமானதாகும்,

குண்டை வெடிக்க உதவிடும் மின் வயர்கள் மற்றும் பலரக உதிரிகள் பெண்ணின் மேற் சட்டைக்குள்ளேயே வைக்கப்பட்டிருந்தன. பத்து வோல்ட் மின்கலமும் மேற்சட்டைக்குள்ளேயே வைத்திருந்திருக்கிறார்.

குண்டை வெடிக்கச் செய்வதற்கு மிக இலகுவில் இயக்கக்கூடியதான அழுத்திகளை [சுவிட்சுகளை] தமது இடையில் கட்டியிருந்த 'பெல்ட்'டில் அவர் பொருத்தியிருக்கிறார். அந்த 'பெல்ட்' கிராமிய உலோகமுலாமிடப்பட்டது.

அழுத்திகளில் ஒன்று, ராஜீவ் தற்கொலைப் பெண்ணுக்குச் சற்று தொலைவில் வந்தபோது போடப்பட்டிருக்கிறது. அது குண்டை வெடிக்கச் செய்வதற்குத் தூண்டும் [Activate] அழுத்தியாகும்.

ராஜீவ் தன்னை நெருங்கியதும் அந்த இளம் பெண் மாலையைப் போட்டுவிட்டு ஒருசில விநாடி நேரத்தில் அவரின் காலைத் தொடும் பாணியில் குனிந்திருக்கிறார். அப்போதே இரண்டாவது அழுத்தியைத் தொட்டுக் குண்டை அவர் வெடிக்க வைத்திருக்கிறார்.

### ராஜீவின் உடல் சிதைந்தது

அதனால் ராஜீவின் தலை, வயிறு, நெஞ்சு ஆகிய பகுதிகள் நேரடியாகத் தாக்குண்டன; சிதைந்து போயின. அதனாலேயே சம்பந்தப்பட்ட பெண்ணின் தலையின் பின்பகுதியும் முற்றாகச் சிதைந்துள்ளது.

ராஜீவுக்கும் அந்தப் பெண்ணுக்கும் இடையிலான தூரம் ஒன்று அல்லது இரண்டு யார் அளவாக இருந்திருக்கும் என மதிப்பிடப்படுகிறது.

வெடிக்க வைக்கப்பட்ட குண்டு ஏனைய ரகக் குண்டுகளை விடப் பல மடங்கு பயங்கரமானதாகும். வெடிமருந்துக்குள் ஆயிரக் கணக்கான உருக்குத் துண்டுகளை வைத்து 'கிளைமோர்' தாக்குதலைப் போல அது தயாரிக்கப்பட்டிருக்கிறது. ஒவ்வொரு துண்டமும் இரண்டு மில்லி மீட்டர் விட்டமுடையது. குண்டு வெடித்தவுடன் ஒரு விநாடிக்கு 5,000 மீட்டர் வேகத்தில் பாய்ந்து செல்லக்கூடியது.

ராஜீவின் சடலத்திலும், தற்கொலைப் படைப் பெண்ணின் சடலத்திலும் பெரும் எண்ணிக்கையான அந்தத் துண்டுகள் காணப்பட்டன. இறந்த ஏனையோரின் சடலங்களிலும் சம்பவம் நடந்த இடத்திலிருந்து தொலைவான இடங்களிலும் அவை கண்டெடுக்கப்பட்டன.

### வெளிநாட்டுத் தயாரிப்பு

இந்தச் சக்தி வாய்ந்த குண்டு வெளிநாட்டுத் தயாரிப்பு எனவும் மின்கலமும் வெளிநாட்டுத் தயாரிப்பே என்றும் தெரியவந்திருக்கிறது.

ராஜீவ் காந்தியைக் கொலை செய்யப் பயன்படுத்தப்பட்ட RDX [சைக்கிளோ - திரி - மெதலியின் - திரி நைத்ரா மைன்] குண்டு ஸ்ரீலங்கா அமைச்சர் ரஞ்சன் விஜேரத்னாவின் கொலைக்கும் பயன்படுத்தப்பட்டது போன்ற ஒன்று என்றும் தெரிவிக்கப்படுகிறது. [அ]

## கட்டாக்காலி நாய்கள்

யாழ் மாநகரசபை எல்லைக்கு உட்பட்ட பகுதிகளில் கட்டாக்காலி நாய்களைப் பிடிக்கும் நடவடிக்கை மீண்டும் ஆரம்பமாகி உள்ளது.

யாழ். போதனா வைத்திய சாலை உட்பகுதியில் மாத்திரம் 35 நாய்கள் பிடிக்கப்பட்டுள்ளன. [இ-15]

## பழுகாமத்...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

செய்யப்பட்டுள்ளனர்.

பெரியபோரதீவில் தங்கியுள்ள இராணுவத்தினரும் ரெலோ உறுப்பினர்களும் நேற்று முன்தினம் காலை 6 மணிமுதல் 7. 30 மணிவரை பழுகாமம் பகுதியை சுற்றி வளைத்துத் தேடுதல் நடத்தினர்

அச்சமயம் - இரண்டு இளைஞர்களும் ஒரு குடும்பத் தலைவரும் மிகக் கொடூரமான முறையில் வெட்டிக் கொலை செய்யப்பட்டனர்.

வேறு இரு பாடசாலை மாணவர்களும் ஒரு இளைஞனும் இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டனர்.

இதேவேளை பழுகாமம் பகுதியில் உள்ள தமிழ் மக்களின் கடைகளும் உடைக்கப்பட்டு, பொருள்கள் எடுத்துச்செல்லப்பட்டுள்ளது

கடந்த 25 ஆம் திகதியும் குடும்பஸ்தர் ஒருவர் வெட்டிக் கொலை செய்யப்பட்டார் என்று தெரிவிக்கப்பட்டது. [ஓ-5]


A/L

PHYSICS

திரு. R சத்தியசீலன்

★ வெப்பவியல்

★ சடப்பொருளின் இயல்புகள்

ஆரம்பம்: 28-05-1991

செவ்வாய் பி ப 4 30

விவரங்களுக்கு:

PERSONAL

NEW SCIENCE CENTRE

Elilakam Front Lane, JAFFNA.

[இ-0019]



## மகளிர் இல்லத்துக்கான மேற்பார்வையாளர் தேவை

உடுவில் உதவி அரசாங்க அதிபர் பிரிவில் உள்ள மகளிர் இல்லத்துக்கு மேற்பார்வையாளர் தேவைப்படுகிறது:

தொடர்ந்து மேற்படி இல்லத்தில் தங்கக் கூடியவராகவும், சமூகசேவையில் ஆர்வமுடையவராகவும், இது போன்ற பணிகளில் ஈடுபட்டுள்ளவராகவும் இருக்கும் பட்சத்தில் கீழே உள்ள முகவரியில் நேரில் தொடர்பு கொள்ள வேண்டும்.

தமிழர் புனர்வாழ்வுக் கழகம்,

83/2, காங்கேசன்துறை வீதி,

கொக்குவில்.

[16928]


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

### பிரெஞ்சு குழு மீது தாக்குதல்:

# ஆணையாளர் விசாரணை; ஜூன் 7ஆம் திகதி அறிக்கை

கொழும்பு, மே 28

வவுனியா தாண்டிக்குளத்தில் வைத்து பிரெஞ்சு வைத்தியக் குழுவினர் சென்ற வாகனம் மீது நடத்தப்பட்டவான தாக்குதல் சம்பவம் குறித்து விசாரணை நடத்தி வரும் தனி ஆணையாளர் தனது அறிக்கையை எதிர் வரும் ஜூன் மாதம் 7 ஆம் திகதி சமர்ப்பிப்பார் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

அந்த அறிக்கை வெளியிடப்பட்ட பின்னரே, பிரெஞ்சு வைத்தியக் குழுவினர் தொடர்ந்தும் இலங்கையில் பணிபுரிவது பற்றி எம். எஸ். எப். அமைப்பு தீர்மானிக்கும் என்று அந்த அமைப்பின் இலங்கைக்கான இணைப்பதிகாரி டாக்டர் ஆன் வின்சென்ட் தெரிவித்தார்.

அறிக்கை வெளிவரும் வரை பிரெஞ்சுக் குழுவினர் கொழும்பில் தங்கியிருப்பர் என்றும் அவர் சொன்னார். [ஒ-எ]

## கி. சேவையாளர் கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், மே 28

யாழ். மாவட்டத்திலுள்ள கிராம சேவை அலுவலர்கள் அனைவருக்குமான கலந்துரையாடல் ஒன்று நாளை மறுதினம் [வியாழன்] காலை 10 மணிக்கு யாழ். செயலகத்தில் நடைபெறவுள்ளது.

கலந்துரையாடலில் சகல கிராம சேவை அலுவலர்களையும் பங்குபற்றுமாறு யாழ். அரச அதிபர் திரு. கே. மாணிக்கவாசகர் கேட்டுள்ளார். [ஒ-5]

# படையினரின் கெடுபிடி ஓரளவு குறைந்தது?

கொழும்பு, மே 28

வடபகுதிக்கு பொருள்களை எடுத்துச் செல்வதற்கு இது வரை இருந்து வந்த கட்டுப்பாடுகள் கடந்த ஞாயிறு முதல் ஓரளவு தளர்த்தப்பட்டுள்ளன என்று கொழும்புப் பத்திரிகைச் செய்திகள் தெரிவிக்கின்றன.

மண்ணெண்ணெய், சீனி, மா, சவர்க்காரம் ஆகியன எடுத்துச் செல்ல அனுமதிக்கப்படுகின்றன என்றும், ஒரு நபர் 20 லீற்றர் மண்ணெண்ணெய்யை விவசாய தேவைகளுக்கு எடுத்துச் செல்லவும் 6 டோர்ச் லைட் பட்டரிகளை எடுத்துச் செல்லவும் அனுமதிக்கப்படுகின்றார் என்று கொழும்புப் பத்திரிகைச் செய்திகள் மேலும் தெரிவிக்கின்றன.

வடபகுதி இராணுவ பொறுப்பதிகாரி மேஜர் ஜெனரல் டென்சில் கொப்பேகடுவ தாண்டிக்குளம் சோதனை முகாமுக்குச் சென்று நிலைமைகளை நேரில் பார்த்தார் என்றும் தெரிவிக்கப்படுகிறது. [இ-எ]

### வெள்ளவத்தையில்

# தமிழ் இராணுவ அதிகாரி மனைவி, பணியாள் கொலை

கொழும்பு, மே 28

தமிழரான இராணுவ உயர் அதிகாரி ஒருவரும் அவரது மனைவியும் வீட்டு வேலைக்காரனும் கத்தியால் குத்திக் கொலை செய்யப்பட்டனர்.

இந்தச் சம்பவம் கடந்த வாரம் வெள்ளவத்தையில் இடம் பெற்றது.

இது சம்பந்தமாக கொலையுண்ட இராணுவ அதிகாரியின் 15 வயது மகன் சந்தேகத்தில் வெள்ளவத்தைப் பொலீஸாரால் தடுத்து வைக்கப்பட்டுள்ளார்.

இச் சிறுவன் நிச்பிரமை பிடித்த நிலையில் எதுவும் பேசமுடியாத நிலையில் இருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

ஸ்ரீலங்கா இராணுவத்திலிருந்து பிரிகேடியராகப் பணியாற்றி அண்மையில் மேஜர் ஜெனரலாகப் பதவியுயர்வு பெற்ற ஈ. ஜி. தேவநாயகமும் அவரது மனைவியும் வீட்டுப் பணியாளுமே படுகொலை செய்யப்பட்டவர்கள் ஆவர்.

## மரண அறிவித்தல்

### க. பாலசுப்பிரமணியம்

வேலணை கிழக்கைச் சேர்ந்த காலஞ்சென்ற கந்தையா, நாகரெத்தினம் தம்பதிகளின் மகனும், கொழும்பு நிரோஷன் றேடர்ஸ் உரிமையாளருமாகிய க. பாலசுப்பிரமணியம் 26-5-91 இல் கொழும்பில் காலமானார். இவர் சரோஜினிதேவியின் அன்புக் கணவரும் நிரோஷன், கலக்சனா ஆகியோரின் அன்புத் தந்தையும், ஆறுமுகம் தம்பதிகளின் மருமகனும், நேசராசா, யோகநாதன் [பிரான்ஸ்], பரமேஸ்வரி, முத்துலெட்சுமி, மீனலோஜினி, விமலா [பிரான்ஸ்], ஆகியோரின் அன்புச் சகோதரரும், மகாலிங்கம், மனோபிரான், பூமிபாலன், கிருஷ்ணாம்பிகை, புனிதவதி ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் 28-05-91 இன்று மாலை 2 மணிக்கு வேலணை கிழக்கில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியைகளுக்காக சாட்டி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இத் தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளுகின்றோம்.

தகவல்:
க. நேசராசா
வேலணை, கிழக்கு [16957]

இப்பத்திரிகை நியூ உதயன் பப்பிளிகேசன் [பிறைவேட்] லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, [illegible] இலக்கத்தில் உள்ள அச்சகத்தில் 28 - 05 - 1991 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

## விசாரணைக் கமிஷன் நியமனம்

புதுடில்லி, மே 28

ஸ்ரீபெரம்புதூரில் ராஜீவ் காந்தி கொலையுண்டது குறித்து பூரண விசாரணை நடத்துவதற்கு உயர்நீதிமன்ற நீதியரசர் ஜே. எஸ். வர்மா தலைமையில் கமிஷன் ஒன்று நேற்று நியமிக்கப்பட்டது.

பாதுகாப்புப் பணியில் குறைபாடு எதுவும் இருந்ததா என்பது உட்பட பல அம்சங்களையும் விசாரணைக் கமிஷன் ஆராயும்.

மூன்று மாத காலத்திற்குள் அறிக்கை சமர்ப்பிக்கப்பட வேண்டும் எனப் பணிக்கப்பட்டுள்ளது. [அ-எ]

## அலவன்ஸாக மொத்தம் ரூ. 6 கோடி

கொழும்பு, மே 28

சமீபத்தில் நடைபெற்ற உள்ளூராட்சிச் சபைத் தேர்தல்களில் தெரிவான 3 ஆயிரத்து 443 உறுப்பினர்களுக்கு அலவன்ஸாக வருடம் 6 கோடி ரூபாவை அரசு செலவிடும்.

இந்த அலவன்ஸை விட தொலைபேசி வசதிகள், வாகன இறக்குமதிக்கான விசேட சலுகை ஆகியவையும் உறுப்பினர்களுக்கு வழங்கப்படும். [இ]

## அரையிறுதி இன்று

யாழ்ப்பாணம், மே 28

யாழ்ப்பாணம் ஜெலி விராரிகள் விளையாட்டுக் கழகம் நடத்தும் — நொக்கவுட் முறையிலான — மட்டுப்படுத்தப்பட்ட ஓவர்களைக் கொண்ட கிரிக்கெட் போட்டிகளின் — அரையிறுதி ஆட்டங்கள் இன்று நடைபெறவுள்ளன.

யாழ் இந்துக் கல்லூரி மைதானத்தில் காலை 8 30 மணிக்கு முதலாவது அரையிறுதி ஆட்டமும் நண்பகல் 1 30 மணிக்கு மற்றைய அரையிறுதி ஆட்டமும் ஆரம்பமாகும்.

இறுதியாட்டம் எதிர்வரும் சனிக்கிழமை — ஜூன் முதலாம் திகதி — நடைபெறும்.

போட்டிக்கான ஏற்பாடுகளை கழகத்தின் போட்டிக் குழுச் செயலாளர் திரு. கே. தர்மகுலசிங்கம் மேற்கொண்டு வருகிறார். [உ]

## சடலம் ஒதுங்கியது

யாழ்ப்பாணம், மே 28

நேற்று முன்தினம் பண்ணைக் கடலுக்குள் தவறி விழுந்து அள்ளுண்டு சென்ற நல்லூரைச் சேர்ந்த சிவராசா தேவதாஸன் என்பரது சடலம் நேற்றுக்காலை பாஷையூர் கடற்கரையில் கரை ஒதுங்கியது. [ஒ-15]

## வாரம் 3 நாட்கள் படகுச் சேவை

நெடுந்தீவு, மே 28

தற்போது வாரம் இரண்டு தினங்கள் நடைபெற்று வரும் குறிகாட்டுவான் - நெடுந்தீவு படகுச் சேவை வாரம் மூன்று தினங்களாக அதிகரிக்கப்பட்டுள்ளது.

திங்கள், புதன், வெள்ளிக் கிழமைகளில் இச் சேவை இடம் பெறும். இதற்கான கட்டணமும் 50 சதமாக இருக்கும். [இ-111]

## நெடுந்தீவு உ. அ. அதிபர்

நெடுந்தீவு உதவி அரசாங்க அதிபராக திரு. எஸ். வேதநாயகம் நியமிக்கப்பட்டார். [illegible] [இ-111]

# கட்டுவன் மோதலில் கப்டன் ரமேஷ் வீரமரணம்

யாழ்ப்பாணம், மே 28

நேற்று முன்தினம் காலை கட்டுவன் பகுதியில் இராணுவத்தினருடனான மோதலில் வீரமரணமடைந்த கப்டன் ரமேஷின் [தர்மலிங்கம் ரஞ்சன்— அச்சுவேலி] புகழுடம்பு நேற்று மாலை 5-30 மணியளவில் வடமராட்சி மாவீரர் மயானத்தில் தகனம் செய்யப்பட்டது.

முன்னதாக வீரவேங்கை ரமேஷின் புகழுடம்பு அவரது சொந்த ஊரான அச்சுவேலியில் மக்கள் அஞ்சலிக்காக வைக்கப்பட்டது. பல நூற்றுக்கணக்கான மக்கள் அஞ்சலி செலுத்தினர். [ஒ-5]

# அனுராவை கைது செய்ய வேண்டாம் என ஆலோசனை

கொழும்பு, மே 28

சமீபத்தில் நடைபெற்ற உள்ளூராட்சிச் சபைத் தேர்தல்களின் போது சட்டவிரோதமாக நடந்துகொண்டதுக்காக அனுரா பண்டாரநாயக்காவை கைதுசெய்ய வேண்டாம் என்று பொலீஸாருக்கு சட்டமா அதிபர் ஆலோசனை தெரிவித்துள்ளார்.

கம்பஹா மாவட்டத்தில் உள்ள கெரவல வாக்களிப்பு நிலையத்துக்குள் மே 11 ஆம் திகதி அனுரா பண்டாரநாயக்கா சட்டவிரோதமாக பிரவேசித்தார் என்று கூறப்படுகிறது.

இந்தச் சம்பவம் தொடர்பாக பொலீஸார் லிபரல் கட்சி மாகாணசபை உறுப்பினரான காமினி குணரத்னவை கைதுசெய்துள்ளனர். ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியைச் சேர்ந்த மேர்வின் சில்வா என்பவர் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டு பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார்.

கடந்த வாரம் இரு சிரேஷ்ட பொலீஸ் அதிகாரிகள் சட்டமா அதிபர் சுனில் டி சில்வாவைச் சந்தித்து கெரவல வாக்களிப்பு நிலைச் சம்பவம் தொடர்பாக அனுராபண்டாரநாயக்காவை கைது செய்ய முடியுமா என்று ஆலோசனை கேட்டனர்.

அனுரா பண்டாரநாயக்காவுக்கு எதிரான சாட்சியங்கள் அவரைக் கைதுசெய்வதற்குப் போதுமானவையாக இல்லை என்று சட்டமா அதிபர் அப்போது தெரிவித்தார். [இ]

### ★ தாண்டிக்குளம் படையினரால்

# வெளிநாட்டு பிரதி நிதிகளின் "பற்றரி"களும் பறிமுதல்!

யாழ்ப்பாணம், மே 28

இரு வெளிநாட்டு தொண்டர் நிறுவனப் பிரதிநிதிகள் வடக்கே எடுத்து வந்த "பற்றறி"களை நேற்று முன்தினம் தாண்டிக்குளம் இராணுவத்தினர் பறித்தெடுத்தனர்.

அந்தப் பிரதிநிதிகள் பயணம் செய்த வாகனங்களும் சில மணி நேரம் தடுத்து வைக்கப்பட்டன.

கொழும்பில் கூட்டுப்படைத் தலைமையகத்தின் அனுமதியுடன் "பற்றறி"கள் எடுத்து வரப்பட்டதாக சம்பந்தப்பட்ட வட்டாரங்களில் இருந்து தெரியவருகிறது.

தொண்டர் நிறுவனப் பிரதிநிதி ஒருவரின் வானொலியில் இருந்த 'பற்றறி' கூட கழற்றி எடுக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

பிரதிநிதிகள் எடுத்து வந்த பொருள்கள் அனைத்தும் படையினரால் சோதனையிடப்பட்டதாகவும் தெரியவந்தது. [ஒ-5]

# ராஜீவின் அஸ்திக் கலசம் பஞ்சாப் எடுத்துவர எதிர்ப்பு

மறைந்த ராஜீவ் காந்தியின் அஸ்திக் கலசத்தை பஞ்சாப் மாநிலத்துக்கு எடுத்து வர அனுமதிக்க வேண்டாம் என்று அகாலி தள் தலைவர் சிம்ரஞ்சித்சிங் மான் மாநில அரசிடம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

பஞ்சாப்புக்கு அஸ்திக்கலசம் கொண்டு வரப்பட்டால், அங்கு வகுப்பு வாதக் கலவரங்கள் வெடிக்கலாம் என்றும் அவர் எச்சரித்துள்ளார்.

இதேவேளை—

ராஜீவின் அஸ்திக்கலசங்கள் திரிவேணி சங்கமத்தில் கரைப்பதற்காக ரயிலில் விரைந்து கொண்டிருக்கின்றன என்று நேற்று மாலை தெரிவிக்கப்பட்டது. [த]

### குண்டு வெடிப்புக்குச் சற்றுமுன்

# ஜே. ஆரின் செய்தி ஒன்று ராஜீவிடம் வழங்கப்பட்டது!

சென்னை, மே 28

ஸ்ரீபெரும்புதூர் கூட்டத்தில் கலந்து கொள்ளச் சென்னை மீனம்பாக்கம் விமான நிலையம் வந்திறங்கிய ராஜீவ் காந்தியிடம், முன்னாள் ஜனாதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தனா அனுப்பிய செய்தி ஒன்றை ஜெயவர்த்தனாவின் நண்பர் ஒருவர் கையளித்தார்.

அந்தச் செய்தியில் ராஜீவுக்கு நல்வாழ்த்துக்களைத் தாம் தெரிவித்திருந்ததாக திரு. ஜெயவர்த்தனா கொழும்பில் தெரிவித்தார்.

கடிதத்தைக் கையளித்த தமது நண்பரின் பெயரை வெளியிட வேண்டாம் என ஜெயவர்த்தனா கொழும்புச் செய்தியாளர்களைக் கேட்டுக் கொண்டார்.

செய்தியை வாங்கி தமது மகிழ்ச்சியைத் தெரிவித்த ராஜீவ், ஜே. ஆரின் உடல் நிலை பற்றி அந்த நண்பரிடம் விசாரித்து அறிந்து கொண்டார்.

தம்முடன் காரில் வரும்படி ஜே. ஆரின் நண்பரை ராஜீவ் அழைத்தார். அந்த நண்பர் மறுத்து விட்டார்.

ஆனால் ஜே. ஆரின் நண்பருடன் சென்ற தமிழ் நண்பர்கள் சிலர் ராஜீவுடன் அவரது காரில் சென்றனர்.

அவர்களில் இருவர் ஸ்ரீபெரும்புதூர் குண்டு வெடிப்பில் காயமடைந்தனர் என்று தாம் அறிந்து கொண்டதாக திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தனா கொழும்புச் செய்தியாளர்களிடம் தெரிவித்தார். [உ-எ]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org